# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.299/2020.
Prosecution witness for P.W.13.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திருமதி. சூசையம்மாள்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேலநாட்டார்குளத்தில் குடியிருந்து கிராம உதவியாளராக பணியில் இருந்து வருகிறேன். 12.12.2018 அன்று மேலநாட்டார்குளத்தில் இசக்கியம்மன் கோவில் அருகில் போலீசார் வந்து சம்பவத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்து என்னிடமும், அ.சா.12 இடமும் மகஜரில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 2. சம்பவ இடத்தில் கிடந்த ஒரு இருசக்கர வாகனத்தை கைப்பற்றி எங்களிடம் போலீசார் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.4**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றும், எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னையும், அ.சா.12– ஐயும் காவல்நிலையம் வரவழைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.07.21 18:13:48 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.299/2020.
Prosecution witness for P.W.14.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. காசி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது செய்துங்கநல்லூரில் குடியிருந்து ஊராட்சி செயலாளராக பதவியில் இருந்து வருகிறேன். 2018ம் ஆண்டு போலீசார் என்னை செய்துங்கநல்லூர் காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி என்னிடம் வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம், ரத்தம்பட்ட ஆயுதங்கள் மற்றும் உடைகள் ஆகியவற்றிற்கான கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 5 மற்றும் 6**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 14.12.2018 அன்று காலை 5.30 மணியளவில் போலீசார் செய்துங்கநல்லூருக்கு எங்களை வரவழைத்து அங்கிருந்து எங்களை

கருங்குளம் அழைத்துச் சென்று 1ம் எதிரியை கைது செய்து என்முன்பாகவும், சாட்சி கருப்பசாமி முன்பாகவும் போலீசார் விசாரித்தபோது 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும், அதன் அடிப்படையில் 1ம் எதிரி தேவர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட சுடுகாட்டிற்கு அருகில் முட்செடி புதரில் மறைத்து வைத்திருந்த மேற்படி ஆயுதங்கள் மற்றும் உடைகளை ஆஜர் செய்தபோது போலீசார் மகஜரில் கைப்பற்றும்போதும் நாங்கள் இருவரும் உடனிருந்து அந்த மகஜரில் கையொப்பமிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.07.21 18:13:58 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.